அஞ்சல் வழி படிப்புச் சொல்லிக் கொடுக்கின்ற முறை மேற்கொள்ளப்பட்டு, அதற்கும் வழி தேடவேண்டியிருக்கிறது. அது தவிர, அண்மையில் " இன்ஸ்டிடியூஷன் ஆப் சோஷியல் சர்விஸஸ்" என்ற நிர்வாகத்தினை பல்கலைக் கழகம் எடுத்துக்கொள்கிற நிலை இருக்கிறது. இதற்குப் போதுமான இடம் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே இடமிருந்தால் வைத்துக் கொள்ளலாம். எனவே அந்தக் கட்டடங்களின் உரிமையை மதுரைப் பல்கலைக் கழகத்தினிடத்தில் வைத்திருப்பதா அல்லது சென்னைப் பல்கலைக் கழகத்தினிடத்தில் வைத்திருப்பதா என்பதைப் பற்றிய விவரம் தெரியவில்லை. மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு உரிமை ஆக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளலாம்.

திரு. சா. கணேசன் : இந்த மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியான நூலகப் பகுதியைச் சார்ந்த சுப்பிரமணியன் பூங்கா என்ற பகுதியை நம்முடைய மாநில அரசிடம் மதுரை மாநகராட்சி ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டு அது சம்பந்தமாக ஏதோ சில சங்கடங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால், அதுபற்றி ஏதாவது தகவல் அமைச்சரிடம் உண்டா ? அப்படியிருந்தால், அந்தச் சங்கடங்களை நீக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்வதற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Admissions to the Medical Colleges

* 272 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that some of the communities belonging to the backward list have not been represented in the admissions to the medical colleges in the State during the last 3 years;

(b) if so, the name of such communities; and

(c) whether a suitable procedure will be adopted to give equal representation to all the Backward Communities?

1972 நவம்பர் 13]

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த மூன்றாண்டுக் காலமாக இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலிலுள்ள சில வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை யென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அத்தகைய வகுப்புகளின் பெயர்கள் யாவை ?

(உ) பின்தங்கிய வகுப்புகள் அனைத்திற்கும் சமமான பிரதி நிதித்துவம் அளிப்பதற்கேற்ற முறை பின்பற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) சாதி அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாண வர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லையாதலால் ஒவ்வொரு பின் தங்கிய வகுப்புக்கும் தனித்தனியாக இடம் ஒதுக்க இயலாது. அப்படி ஒதுக்குவது அரசியல் அமைப்பு 15(4) விதிமுறையை மீறு வதாகும்.

Rajah Mirasdar (Government) Hospital, Thanjavur

* 273 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the X-ray Department of Rajah Mirasdar (Government) Hospital, Thanjavur is handicapped due to repair of the compression motor of the cooling plant ;

(*b*) if so, the period for which it is under repair; and

(*c*) the action proposed to be taken thereon?

@ 60-65 பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.